# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 33 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அப்பாஸ் | வயது | 33/2022 |
| தகப்பனார் பெயர் | முகமது யூனுஸ் | ஜாதி | |
| தொழில் | கட்டிட தொழில் | மதம் | |
| ஊர் | மன்னார்குடி | தாலுக்கா | மன்னார்குடி |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் மன்னார்குடியில் மும்மூர்த்தி விநாயகர் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் கட்டிட தொழில் செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளில் 1வது எதிரி சக்திவேலை தெரியும். நான் பி. டெக்., படித்துள்ளேன். எனது மனைவி பெயர் ரோஷியா பானு அவர் வீட்டுக்குடித்தனமாக உள்ளார். அவர் பி.எஸ்ஸி., படித்துள்ளார். எனது மனைவிக்கு கோர்ட்டில் வேலை உள்ளதாக எனது நண்பர் ரமேஷ் மூலம் தெரியவந்தது. ரமேஷிடம் பேசியபொழுது ரூ.2 லட்சம் ரூபாய் பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். திருவாரூரில் இயற்கை அங்காடி கடை வைத்துள்ள சக்திவேலிடம் கொடுக்க வேண்டும் என்று கூறினார். அவ்வாறு எப்பொழுது கொடுத்தேன் என்றால் 2018 ம் வருடம் ஜனவரி மாதம் கடைசியில் கொடுத்தேன். பணம் கொடுக்கும்பொழுது நானும், ரமேஷ், அவரது நண்பர் மகேந்திரன் ஆகியோர் சேர்ந்து எதிரி சக்திவேலிடம் பணம் கொடுத்தோம். பணம் கொடுக்கும்போது சக்திவேலும், அவரது மனைவியும் இருந்தார்கள். சக்திவேல் பணத்தை பெற்றுக்கொண்டு 15, 20 நாட்களில் வேலை கிடைத்துவிடும், ஆன்லைனில் அப்பிளிகேஷினை பூர்த்தி செய்ய வேண்டும், பார்த்துக்கொண்டிருங்கள் என்று சொன்னார். நாளாகிகொண்டே போனதால் போனில் தொடர்பு கொண்டு கேட்டோம். கோர்ட் லிவு வந்த காரணத்தினால் ஜீன், ஜுலையில் வந்துவிடும் என்று நகர்த்திக்கொண்டே வந்தார். 1 லட்சம் ரூபாய் பணம்

கொடுத்திருந்தேன். வேலை கிடைத்தவுடன் 1லட்சம் ரூபாய் பணம் கொடுப்பதாக பேசப்பட்டிருந்தது. போன் செய்தோம் .சக்திவேல் எடுக்கவில்லை. சுவிட்ச் ஆப் செய்துவிட்டார். இதற்கிடையில் திருவாரூர் காவல் நிலையத்திலிருந்து போன் செய்தார்கள். பணம் கொடுத்தது சம்பந்தமாக கேட்டார்கள். சக்திவேலிடம் பணம் கொடுத்ததை சொன்னேன். போலிஸ் விசாரணையில் அவர் பணம் வாங்கிய விபரம் தெரிந்துக்கொண்டேன். போலிசார் விசாரணை செய்தார்கள்.

**கு.வி. (1ம் எதிரி தரப்பில்)**

நான் தனிப்பட்ட முறையில் 1வது எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. எந்த தேதியில் குறிப்பிட்டு பணம் கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் ஆமாம்,ஆனால் ஜனவரி மாதம் 22ம் தேதி கொடுத்தேன். நான் சொல்வதுபோல 2018 ஜனவரி மாதம் 22ம் தேதி 1வது எதிரியிடம் எந்த பணமும் கொடுக்கவில்லை. தற்போது முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 1வது எதிரியிடம் எந்த பணமும் கொடுக்கவில்லை, அவ்வாறு பணம்கொடுத்திருந்தால் தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது காவல் துறையினர் சொல்லி கொடுத்ததுபோல் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன விபரங்களுக்கும் 1வது எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரியிடம் ரூ.1லட்சம் ரூபாய் கொடுத்ததாக போலிசார் சொல்லி கொடுத்ததின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சொல்லப்பட்டது).**

**மறுவிசாரணை இல்லை.**

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 34 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துப்பாண்டி | வயது | 34/2022 |
| தகப்பனார் பெயர் | கருப்பையா | ஜாதி | |
| தொழில் | கம்யூட்டர் சென்டரில் வேலை | மதம் | |
| ஊர் | காரைக்குடி | தாலுக்கா | காரைக்குடி |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் காரைக்குடியில் வள்ளலாளர் தெருவில் அழகப்பா புரத்தில் வசிக்கிறேன். கம்யூட்டர் சென்டரில் வேலை செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளில் 1வது எதிரி சக்திவேலை தெரியும். நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். ரமேஷ் என்பவர் மூலமாக கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொன்னார். அதற்கு பிறகு சக்திவேல் என்பவர் வேலைக்கு ரூ.2 லட்சம் கொடுக்க வேண்டும் என்றும், 15 நாட்களில் வேலை ரெடியாகிவிடும் என்றும் சொன்னார். நான் முன்பணமாக ரூ.1 லட்சம் பணத்தை ரமேஷ் என்பவரிடம் கொடுத்தேன். ரமேஷ் வீட்டில் வைத்து பணத்தை கொடுத்தேன். பணம் வாங்கிக்கொண்டேன் என்பதை 1வது எதிரி சக்திவேல் ஒரு பத்திரத்தில் எழுதி கொடுத்தார். 2018-ல் 4 வது மாதம் மன்னார்குடியில் உள்ள ரமேஷ் வீட்டில் ரூ.1 லட்சம் ரமேஷிடம் கொடுத்தேன். சக்திவேல் போனில் பேசினார். அவர் ஊரில் இல்லாததால் ரமேஷிடம் கொடுத்தேன். என்னுடைய படிப்பு சான்றிதழ்களை ரமேஷிடம் கொடுத்தேன். டி.எஸ்.பி. ஆபீஸில் பணம் எதற்கு கொடுத்தீர்கள் என்று விசாரணை செய்தார்கள். விபரம் சொன்னேன். பணம் மற்றும் ஆவணங்களை சக்திவேலிடம் கொடுப்பதாக ரமேஷ் கூறினார். போலிசார் விசாரணையில் நிறைய நபர்களிடம் பணம் வாங்கி உள்ளார்கள் என்ற விபரம் தெரிந்துக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1ம் எதிரி தரப்பில்)**

நான் ரூ.1லட்சம் ரூபாய் பணம் எனது படிப்பு சான்றிதழ்களை நேரடியாக 1வது எதிரி சக்திவேலிடம் கொடுக்கவில்லை என்றால் ஆமாம், ஆனால் 1வது எதிரி போன் செய்தார். அன்றைய தினம் சக்திவேல்தான் என்னிடம் போனில் பேசினார் என்று உறுதியாக சொல்ல இயலுமா என்றால் 1வது எதிரிதான் பேசினார் என்று எனக்கு உறுதியாக தெரியும். அன்றைய தினம் 1வது எதிரி போனில் பேசினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றும், அவ்வாறு அவர் பேசவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி இந்த 15 நாட்களில்வேலை வாங்கி தருவதாகவும், 2 லட்சம் கொடுத்தால் அவர் வேலை வாங்கி தருவதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் தேதி, மாதம் ஞாபகம் இல்லை, 2020-ல் எழுதி கொடுத்தார். எதிரி எந்த பத்திரமும் எழுதி கொடுக்கவில்லை என்பதால் தேதி, மாதம் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி என்னிடம் பேசவில்லை, இவ்வழக்குக்கும் அவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த பணமும், ஆவணமும் 1வது எதிரியிடம் போய் சேர்ந்ததா என்பதை சொல்ல இயலாது என்றால் பணம் சேரவில்லை என்றால் எனக்கு தொடர்புக்கொண்டிருப்பார். 1வது எதிரி நேரடியாக என்னிடம் பணம் எதுவும் பெறவில்லை என்றால் நான் நேரடியாக பணம் கொடுக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கும் 1வது எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**கு.வி. (2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சொல்லப்பட்டது).**

**மறுவிசாரணை இல்லை.**

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 35-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவரஞ்ஜனி | வயது | 34/2022 |
| கணவர் பெயர் | முத்துப்பாண்டி | ஜாதி | |
| தொழில் | தனியார் பள்ளியில் முதல்வராக உள்ளேன். | மதம் | |
| ஊர் | காரைக்குடி | தாலுக்கா | காரைக்குடி |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் காரைக்குடியில் அழகப்பாபுரம், வள்ளலாளர் தெருவில் வசித்து வருகிறேன். தனியார் பள்ளியில் முதல்வராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளில் 1வது எதிரி சக்திவேலை தெரியும். நான் எம்.ஏ.,பி.எட்., எம்.பில்., படித்துள்ளேன். மன்னார்குடி கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக ரமேஷ் என்பவர் அணுகினார். ரமேஷ் என்பவர் எனது சித்தப்பா, அவர் சக்திவேல் என்பவர் மூலமாக வேலை வாங்கி தருவதாக சொன்னார். 2018-ல் வேலை வாங்கி தருவதாக சொன்னார். வேலை வாங்கி தருவதற்கு ரூ.2 லட்சம் ரூபாய் பணம் கேட்டார். எனது சித்தப்பா ரமேஷ் சக்திவேல் மூலமாக பணம் கேட்டார். நான் எனது வேலைக்காக ரூ.1 லட்சம் கொடுத்தேன். எனது சித்தப்பா ரமேஷிடம் பணத்தை கொடுத்தேன். பணம் மற்றும் ஆவணங்கள், பையோ டேட்டா, பாஸ்போர்ட் சைஸ் போட்டோ கொடுத்தேன். 2018-ல் ஜனவரி முதல் மார்ச் மாதத்திற்குள் எனது சித்தப்பா வீடு உள்ள மன்னார்குடியில் வைத்து பணத்தை கொடுத்தேன். வாட்சாப்பில் வேலை சம்பந்தமான தகவல் பார்த்தேன். அப்பொழுது எனது சித்தப்பா தொடர்பு கொண்டதன் அடிப்படையில் சக்திவேல் என்பவரை தொடர்பு கொள்ளலாம் என்று சொன்னார். சக்திவேல் என்பவர் எனது கணவருக்கு ஒருமுறை போன் செய்து சீக்கிரம் பணத்தை கொடுங்கள் வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார். பணம்

கொடுத்தபொழுதுதான் எதிரி சக்திவேலை தொடர்பு கொண்டோம். அதற்கு பிறகு எனது சித்தப்பா ரமேஷிசை தொடர்பு கொண்டோம். போலிசார் என்னை தொலைபேசி மூலம் அழைத்து விசாரித்து, பிறகு நேரடியாக விசாரித்தார்கள். அப்போது நாங்கள் பணம் கொடுத்த விபரத்தை சொன்னோம். போலிசார் பணம் கொடுத்த விபரத்தை கேட்டார்கள். ரமேஷ் மூலமாக பணம் மற்றும் டாக்குமெண்ட் கொடுத்த விபரத்தை சொன்னோம். இதை போல 83 நபர்களை ஏமாற்றியுள்ளார்கள் என்றும், அது சம்பந்தமான வழக்கில் நாங்கள் சாட்சியமளிக்க வேண்டும் என்ற விபரத்தை தெரிந்துக்கொண்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1ம் எதிரி தரப்பில்)**

நான் பணம் மற்றும் எனது படிப்பு சான்றிதழ்களை நேரடியாக 1வது எதிரி சக்திவேலிடம் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். 1வது எதிரி தொலைபேசியில் பேசிய பிறகு தற்போதுதான் நீதிமன்றத்தில் நேரடியாக பார்க்கிறேன் என்றால் ஆமாம். அதற்கு முன்பு வரை அவர் எப்படி இருப்பார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 1வது எதிரி தொலைபேசியில் பேசியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கும் 1வது எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**கு.வி. (2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சொல்லப்பட்டது).**

**மறுவிசாரணை இல்லை.**